இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 199 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 17 – ஞாயிற்றுக்கிழமை 01 மார்ச் 2026 – திருச்சி ★★ 76 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 199 : Thiruvalluvar Year - 2057 - Maasi 17 - Sunday 01 March 2026 - Trichy ★★ 76 Pages ₹ 5.00

## ஆடம்பரத்தைத் தவிர்த்திடுவீர்!

# ஆக்கப்பூர்வமான பிரச்சாரப் பணியினை அமைதியாக மேற்கொள்வீர்!

## பிறந்தநாளையொட்டி கழகத்தினருக்கு தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, மார்ச் 1-**

**கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது பிறந்தநாளையொட்டி விடுத்துள்ள அறிக்கையில், "ஆடம்பரத்தைத் தவிர்த்திடுவீர்! ஆக்கப்பூர்வமான பிரச்சாரப் பணியினை அமைதியாக மேற்கொள்வீர்!" என, கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

கழகத்தலைவர்–முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைவர் கலைஞர் – அன்னை தயாளு அம்மாள் ஆகியோரின் மகனாகப் பிறந்து; பொதுவுடைமைப் பூமியாம் சோவியத் நாட்டின் சுடரொளி 'ஸ்டாலின்' அவர்களின் பெயர் சூட்டப்பட்டு, கொள்கைக் கோட்டமாம் கோபாலபுரத்தில் வளர்ந்து, இளமையிலேயே இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டு, திராவிட இயக்கத்தை நோக்கி இளைஞர்களைத் திரட்டிடும் இனிய பணியைச் சுமந்து, கடந்து வந்த மேடு – பள்ளங்களைச் சமமாகப் பாவித்து ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்துக் கொண்டு; தலைவர் கலைஞர் அவர்களிடம் பயின்ற பண்புகளோடும், கடமை உணர்வோடும் கழகத்தைக் கண்களாகவும் தலைவர் கலைஞர் அவர்களைக் கதிரொளியாகவும் கொண்டு, என்னால் இயன்றவரை எல்லோருக்கும் பயனுள்ள வகையில், கனிவு – துணிவு ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு, தொண்டூழியம் ஆற்றி வரும் எனக்கு மார்ச்–1 அன்று 73–ஆவது பிறந்த நாள்!

1-3-2026 அன்று எனது பிறந்த நாளையொட்டி ஆர்வம் மிகுதியால், கண்ணுறுத்தும் படாடோப விளம்பரங்களைக் கட்டாயம் தவிர்த்து, அனுமதிக்கப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றி நிகழ்ச்சிகளை நடத்திட வேண்டும். உற்சாகமும் உத்வேகமும் எல்லை மீறிப் போக அனுமதித்திடக் கூடாது.

பிறந்த நாளையொட்டி, சமுதாயத்தில் மெலிந்து நலிந்த பிரிவினரான ஏழை எளிய மகளிர், முதியோர், ஆதரவற்றோர்,



திருநர்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோரின் நலன் பேணும் வகையில் இயன்ற உதவிகளைச் செய்வது; கழகக் கொடிகளைப் புதுப்பிப்பது – புதிய கொடிகளை ஏற்றி வைப்பது – கிளைக் கழகங்களின் பெயர்ப் பலகைகளைப் புதுப்பிப்பது – பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் பெயர்களில் அமைந்துள்ள படிப்பகங்களுக்குப் பயனுள்ள புதிய நூல்களை வழங்குவது, கழகத்தின் மூத்த உறுப்பினர்களைச் சிறப்பிப்பது, பெருவாரியாக ரத்த தானம் செய்வது போன்றவற்றை ஆற்றுவதுமே அவசியமானவை. இயக்கத்திற்கு ஆக்கமளித்திடும் இத்தகைய செயல்பாடுகளை மட்டுமே நான் பெரிதும் வரவேற்கிறேன்; சமூக உணர்வும், இயக்கப் பற்றும் மிளிரும் இத்தகைய நற்செயல்கள் எல்லா இடங்களிலும் நிகழுமானால், அவற்றையே என்னரும் தோழர்களின் இதய வாழ்த்துகளாகக் கொண்டு பெருமகிழ்ச்சி கொள்வேன்!

### இப்போதிருந்தே தேர்தல் பணிகளைத் தொய்வின்றித் தொடர்ந்திடுவீர்!

இன்று முதல் நமது நிலையும் நினைப்பும் எதிர்வரும் 2026 சட்டப்பேரவைத் தேர்தலையே மையம் கொண்டதாக இருந்திட வேண்டும்.

'நாட்கள் இருக்கிறதே, என்ன அவசரம்' என்று எண்ணிடாமல், இப்போதிருந்தே தேர்தல் பணிகளைத் திட்டமிட்டுத் தொய்வின்றித் தொடர்ந்திட வேண்டும். நமது 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களால் "ஸ்டாலின் தொடரட்டும்; தமிழ்நாடு வெல்லட்டும்" என்ற குரல் தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. எனவே, ஏழாவது முறையும் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிட உங்களது உழைப்பு அமைந்திட வேண்டும்! அதுவே எனக்கு நீங்கள் வழங்கிடும் சிறந்த பிறந்த நாள் வாழ்த்து!

ஆடம்பரத்தைத் தவிர்த்து ஆக்கப்பூர்வமான பணிகளை அமைதியாக மேற்கொள்வீர்! இந்த எனது அன்பு வேண்டுகோளை எல்லோரும் நினைவில் கொள்வீர்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் - முன்னாள் எம்.பி. - எம்.எல்.ஏ.- மாவட்டச் செயலாளர்கள் - தி.மு.க.வில் இணைந்தனர்!





சென்னை, மார்ச் 1 –

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (27.02.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் மக்களவை முன்னாள் உறுப்பினர் இரவீந்திரநாத், உசிலம்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பி.அய்யப்பன் மற்றும் மதுரை இரா.கோபாலகிருஷ்ணன், முன்னாள் எம்.பி. புதுவை மாநில அமைப்பாளர் ஓம்சக்தி சேகர், அம்மா பேரவை முன்னாள் துணைச் செயலாளர் டி.ரமேஷ், மாநில வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர் சி.திருமாறன், இணைச் செயலாளர் வழக்கறிஞர் திருமதி பி.ராஜலட்சுமி, மாவட்டச் செயலாளர்கள் சென்னை ரெட்சன் சி.அம்பிகாபதி, திருப்பூர் மடத்துக்குளம் கே.மாரிமுத்து, நாமக்கல் பழனிசாமி, மாநில மகளிர் அணி இணைச் செயலாளர் ரீத்தா பழனிசாமி, புதுக்கோட்டை நகர்மன்ற முன்னாள் தலைவர் ராஜசேகர் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்களான எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், பி.கே.சேகர்பாபு, தங்கம் தென்னரசு, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க.தமிழ்செல்வன், எம்.பி., போடி இலட்சுமணன், முன்னாள் எம்.எல்.ஏ., ஆகியோர் உடனிருந்தனர்.

---

## மனமகிழ்ச்சியோடு தி.மு.க.வில் இணைந்துள்ளேன்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார் !

### கழகத்தில் இணைந்த - முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பேட்டி!

**சென்னை, மார்ச் 1 –**

**கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (27.2.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஓ.பி. ரவீந்திரநாத், சட்டமன்ற உறுப்பினர் பி.ஐயப்பன் மற்றும் நிருவாகிகள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.**

தமிழ்நாட்டில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாட்டு மக்கள் உள்ளனர் என்று, தி.மு.க.வில் இணைந்த ஓ.பன்னீர் செல்வம்



தெரிவித்துள்ளார்.

மன மகிழ்ச்சியோடு தி.மு.கவில் இணைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்பாக ஆட்சி நடத்தி வருகிறார். கடந்த 5 ஆண்டுகளாக, அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும் என்ற எண்ணத்தில் தமிழ்நாட்டு மக்கள் உள்ளனர் என்றும் ஓ.பன்னீர் செல்வம் குறிப்பிட்டார்.

மற்ற கட்சிகளைப் போன்று இல்லாமல் தேர்தல் அறிக்கைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றியுள்ளதாகத் தெரிவித்தார். நிறைவேற்ற முடியாத தேர்தல் வாக்குறுதிகளை அ.தி.மு.க. வெளியிட்டு வருவதாக விமர்சித்த ஓ.பன்னீர்செல்வம், எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை பூஜ்ஜியமாக இருக்கும் என்றும் விமர்சித்தார்.

---

## முன்னாள் முதலமைச்சர் - அருமைச் சகோதரர்

# ஓ.பன்னீர்செல்வத்தை 'வருக, வருக' என வரவேற்கிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச் 1-**

**"முன்னாள் முதலமைச்சர் - அருமைச் சகோதரர் ஓ.பன்னீர்செல்வத்தை வருக, வருக என வரவேற்கிறேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.**



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

முன்னாள் முதலமைச்சரும் அருமைச் சகோதரருமான திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தாய்க் கழகமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்துள்ளார். அவரை வருக வருக என வரவேற்கிறேன்.

திராவிட இயக்கத்தின் மாபெரும் தலைவரின் பெயரைத் தாங்கிய அவர் திராவிட இயக்கக் கொள்கை காக்கும் நம் பேரியக்கத்தில் இணைந்துள்ளார்.

2026 சட்டமன்றத் தேர்தல் என்பது தமிழ்நாட்டுக்கும் பாசிச பா.ஜ.க.வுக்கும் இடையிலான ஜனநாயகப் போர். இதனை உணர்ந்து தான் பல்வேறு ஜனநாயக சக்திகளும் கழகக் கூட்டணியில் இணைந்து வருகிறார்கள். நம்மோடு இணைந்துள்ள சகோதரர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் அன்பானவர், பண்பானவர், அடக்கமானவர்! அவரது வரவு நல்வரவாகட்டும்! தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு முதல்வர் அவர்கள் வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.